ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1923/14 - 2015 ජූලි මස 14 වැනි අඟහරුවාදා - 2015.07.14

*1923/14 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு யூலை மாதம் 14 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

எனது இல. : CI /353

**கைத்தொழில் பிணக்குகள் சட்டம் (அத்தியாயம் 131)**

கொழும்பு 02, சேர் சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தை, இல. 117 இல் அமைந்துள்ள கீல்ஸ் புட் PLC ஒரு சாரராகவும், கொழும்பு 03, 22 ஆம் ஒழுங்கை, இல. 03 இல் அமைந்துள்ள சிலோன் வர்த்தக கைத்தொழில் மற்றும் பொது வேலையாளர் சங்கம் (CMU) மற்றொரு சாரரராகவும் இருக்க, 2014 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 16 ஆந் திகதி கைச்சாத்திடப்பட்ட பதவி நிலைத் தரம் தொடர்பான கூட்டு உடன்படிக்கையானது (ஆங்கிலத்தில், சிங்களம் மற்றும் தமிழுக்கு மொழி பெயர்ப்பு), இலங்கை பாராளுமன்ற சட்டங்களின் 131 ஆம் அத்தியாயம் கைத்தொழில் பிணக்குகள் சட்டத்தின் 06 ஆம் பிரிவின் நியதிகளின்படி இங்கு பிரசுரிக்கப்படுகின்றது.
(1956 திருத்திய பதிப்பு)

எம். டி. சி. அமரதுங்க,
தொழில் ஆணையாளர்.

தொழில் திணைக்களம்,
தொழில் செயலகம்,
கொழும்பு 05,
2015, யூன் 26.

**2014 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க கூட்டு உடன்படிக்கை**

கூட்டு உடன்படிக்கை

(இதனகத்துப்பின்னர் ''தொழில் தருநனர்'' எனக் குறிப்பீடு செய்யப்படக்கூடிய) கொழும்பு 02, சேர். சித்தம்பலம் ஏ. கார்டினர் மாவத்தையில் இல. 117 என்ற முகவரியில் பதிவு செய்த அலுவலகத்தைக் கொண்டு, இலங்கையில் உரிய முறையில் பதிவு செய்யப்பட்ட கீல்ஸ் புட் புரொடக்ஸ் பி. எல். சி. நிறுவனத்துக்கும் (இதனகத்துப்பின்னர் "சங்கம்'' எனக் குறிப்பீடு செய்யப்படக்கூடிய) கொழும்பு 03 இல் 22 ஆவது ஒழுங்கையில் இலக்கம் 3 என்ற முகவரியில் பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தைக் கொண்டு இலங்கையில் உரிய முறையில் பதிவு செய்யப்பட்ட தொழில் சங்கமான சிலோன் மேர்கன்டைல் இன்டஸ்ரியல் என்ட் ஜெனரல் வேர்கஸ் யூனியனுக்குமிடையில் 2014, ஒற்றோபர் 16 ஆந் திகதி இந்த உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டது.

தொழிலின் நியதிகள் மற்றும் நிபந்தனைகள் என்பவற்றின் மீளாய்வு தொடர்பாக தொடர் கலந்துரையாடல்களின் பின்னர் தொழில் தருநர் மற்றும் சங்கம் பின்வரும் விடயங்களுக்கு உடன்பட்டுள்ளனர்.

1. இந்த உடன்படிக்கையின் நியதிகளானது தொழில் தருனர், (இதனகத்துப்பின்னர் ''தொழிற்சாலை'' எனக் குறிப்பீடு செய்யப்படக்கூடிய) ஜா- எல, ஏகல, மினுவாங்கொடை வீதியில் இல. 16 என்ற முகவரியில் உற்பத்தி வசதியில் இயந்திரப் பாவனையற்ற கொள்ளளவில் தொழிலுக்கு அமர்த்தப்பட்டுள்ள சங்கம் மற்றும் சங்கத்தின் அங்கத்தவர்கள் போன்றோரை காப்பீடுடையதாகவும் பிணைப்புடையதாகவும் இருக்கும். ஆயினும், எவ்வாறாயினும் (இதனகத்துப்பின்னர் ''தொழிலாளர்கள்'' எனக் குறிப்பீடு செய்யப்படக்கூடிய) நிரந்தர, மாதாந்த தொழில் ஒப்பந்தங்களின் தொழில்தருனரின் தொழிற்சாலையில் இயந்திரம் சாராத கொள்ளளவில் தொழிலுக்கு அமர்த்தப் பட்டுள்ள சங்கத்தின் அங்கத்தவர்களுக்கு மாத்திரம் 1- 13 வரையான வாசகங்கள் ஏற்புடையதாக இருக்கும்.

2. இந்த உடன்படிக்கையானது, 2014.11.01 ஆந் திகதியிலிருந்து, ஒரு திறத்தவர் மற்றத்திறத்தவருக்கு ஒரு மாதத்துக்கு முன்னர் எழுத்து மூலம் அறிவித்து நிறைவுறுத்தாத வரை அமுலில் இருக்கும். ஆயினும், எவ்வாறாயினும், 2016.10.01 ஆந்

திகதிக்கு முன்னர் அத்தகைய முடிவுறுத்தல் அறிவித்தலை இரு திறத்தவர்களுக்கும் வழங்க முடியாது என்பதோடு 2016.10.31 ஆந் திகதி வரை முடிவுறுத்தல் செல்லுபடியாக்கப்பட முடியாது.

3. உடன்படிக்கை காலத்தில் உடன்படிக்கை யினால் காப்பீடு மற்றும் பிணைப்புக்கு உட்படுகின்ற தொழிலாளர்களின் சம்பளங்களைத் திருத்துவதற்கு பின்வருமாறு தொழில் தருனர் உடன்படுகின்றார்.

3.1 2014.10.31 ஆந் திகதியில் உள்ளவாறு ஊழியர் ஒருவருக்கு வழங்கப்படுகின்ற அடிப்படை சம்பளத்தின் 8% த்துக்கு சமமான ஒரு தொகை 2014.11.01 ஆந் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் அத்தகைய ஊழியரின் சம்பளத்துக்கு சேர்க்கப்பட வேண்டும்.

3.2 2015.10.31 ஆந் திகதியில் உள்ளவாறு ஊழியர் ஒருவருக்கு வழங்கப்படுகின்ற அடிப்படை சம்பளத்தில் 7% த்துக்கு சமமான ஒரு தொகை 2015.11.01 ஆந் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் அத்தகைய ஊழியரின் சம்பளத்துக்கு சேர்க்கப்பட வேண்டும்.

**4. வருகைக்கான ஊக்குவிப்புக் கொடுப்பனவு :**

பின்வரும் நிபந்தனைகளுக்கமைய 850 ரூபா (எண்ணூற்றி ஐம்பது ரூபாய்) ஒரு வகை, ஊக்குவிப்புத் தொகையாக ஊழியர்களக்கு வழங்கப்பட வேண்டும்.

4.1 ஊழியர் ஒருவர் ஒரு பஞ்சாங்க மாதத்தில் சனிக்கிழமைகள் / ஞாயிற்றுக்கிழமை/ ஏனைய விடுமுறை நாட்களில் மேலதிக நேர வேலை தவிர்ந்த சகல வேலை நாட்கள்/சுழற்றி முறை வேலைகளில் கடமைக்காக வருகின்ற ஊழியர் ஒருவருக்கு மாத்திரம் பூரண ஊக்குவிப்புக் கொடுப்பனவு வழங்கப்படும்.

4.2 வார நாட்கள்/சனிக்கிழமைகள்/ஞாயிற்றுக்கிழமைகள்/ ஏனைய விடுமுறை போன்ற நாட்களில் மேலதிக நேர வேலைக்கு வரும்படி அழைக்கப்படுகின்ற ஊழியர்களுக்கு இந்த ஊக்குவிப்புக் கொடுப்பனவு வழங்கப்பட மாட்டாது.

4.3 (வருடாந்த /சமயாசமய /சுகயீன/பதில் விடுமுறை/ விபத்து விடுமுறை) போன்ற அனுமதிக்கப்பட்ட விடுமுறை பெற்றுக்கொண்ட ஊழியர் ஒருவர் தானாகவே வருகை தராத சந்தர்ப்பத்தில், அத்தகைய ஊழியர் அத்தகைய விடுமுறை காரணமாக அந்த நாளுக்காக ஊக்குவிப்புக் கொடுப்பனவை பெற்றுக் கொள்வதற்கு தகுதியுடையவராக மாட்டார். அதாவது இந்தக் கொடுப்பனவுக்கு தகுதி பெறுவதற்கு ஊழியர் ஒருவர் உண்மையாக வேலைக்கு சமுகமளிக்க வேண்டும். மேலே குறிப்பிட்டவாறு வருகை தராத ஒவ்வொரு நாளுக்கும் 1/20க்கு சமமான தொகை கழிக்கப்படும் ஆயினும், ஒரு பஞ்சாங்க மாதத்துக்கு ஒரு நாள் அங்கீகரிக்கப்பட்ட வருடாந்த விடு முறையை ஓர் ஊழியர் மாதாந்த வருகை ஊக்குவிப்புக் கொடுப்பனவை கழிக்காமல் பெற்றுக் கொள்ள முடியும்.

4.4 அங்கீகாரம் இல்லாமல் ஊழியர் ஒருவர் வருகை தராவிட்டால், (அதாவது அனுமதிக்கப்படாத விடுமுறை) அந்தப் பஞ்சாங்க மாதத்துக்கான மொத்த ஊக்குவிப்புக் கொடுப்பனவையும் அவர் இழந்து விடுவார்.

5. 2014.11.01 ஆந் திகதியிலிருந்து அமுலுக்கு வரும் வகையில் ஒரு செயலாற்றுகை பெறுமதி அடிப்படையில் ஒவ்வொரு படித்தரத்துக்கும் தொடர்புடைய வருடாந்த அதிகரிப்பு பின்வருமாறு அமையும் :-

| | | |
|---|---|---|
| 5.1 | தரம் - I | 75.00 ரூபா |
| 5.2 | தரம் - II | 100.00 ரூபா |
| 5.3 | தரம் -III | 120.00 ரூபா |

6. 6.1 ஊழியர்களுக்குச் செலுத்தப்பட வேண்டிய முறைமாற்றுப்பணிக்கான (Shift Allowance) படி பின்வருமாறு அமையும்.

| | | |
|---|---|---|
| முதலாவது முறைமாற்றுப்பணி | ரூபா | 137.50 |
| இரண்டாவது முறைமாற்றுப்பணி | ரூபா | 131.00 |
| மூன்றாம் முறைமாற்றுப்பணி | ரூபா | 131.00 |

6.2 பொது முறைமாற்றுப்பணியில் உள்ள ஊழியர்களுக்கு ஒரு ''நாளாந்த வருகை மிகை ஊதியம்'' ஆக ஒரு நாளைக்கு ரூபா 34.50 வழங்கப்படும்.

6.3 மேலுள்ள நியதிகளுக்கேற்ப (க்ரெஸ்ட் பிரிவு தவிர்ந்த) தொழிற்சாலையில் உள்ள சகல ஊழியர்களும் 6.1 இல் உள்ள முறைமாற்றுப்பணிக்கானபடி அல்லது 6.2 இல் உள்ள நாளாந்த வருகைக்கான ஊக்குவிப்பு இரண்டில் ஒன்றைப் பெற்றுக்கொள்வதற்குத் தகுதியுடையவர்களாவர்.

6.4 மேலும் குளிர் அறைகளில் வேலைக்கு அமர்த்தப்பட்டுள்ள ஊழியர்கள் தொடர்பில் குளிர் அறைக்கானபடி ரூபா 48.50 வழங்கப்படும்.

7. சாரதிகளின்/சுத்தம் செய்யும் பணியாட்களின்படிச் செலவு (Batta)

| | |
|---|---|
| வெளியிடங்களுக்குப் பிரயாணம் செய்தல் 3 மணித்தியாலங்களுக்கு மேற்பட்டது காலை 11.00 மணிக்கும், ந. ப. 12.30 மணிக்கும் இடையில் மற்றும் பி. ப. 2.00 மணிக்குப் பின்னர் திரும்புதல். (உதாரணம் மு. ப. 11.00 மணிக்குச் சென்று பி. ப. 2.00 மணிக்குத் திரும்புதல்) | 55.00 ரூபா |
| கொழும்பு - நீர்கொழும்பு 4 மணித்தியாலங்களுக்கு மேற்பட்ட பிரயாணம் | 100.00 ரூபா |
| கண்டி - பெந்தோட்டை 8 மணித்தியாலங்களுக்கு மேற்பட்ட பிரயாணம் | 137.50 ரூபா |
| 8 மணித்தியாலயங்களுக்கு குறைந்த பிரயாணம் | 89.50 ரூபா |

| | | |
|---|---|---|
| அவிசாவளை | | 89.50 ரூபா |
| அநுராதபுரம் | 1 நாள் | 172.00 ரூபா |
| | 2 நாட்கள் | 172.00 ரூபா |
| மாத்தறை | 1 நாள் | 247.50 ரூபா |
| | 2 நாட்கள் | 344.00 ரூபா |
| | 3 நாட்கள் | 481.50 ரூபா |
| பண்டாரவளை | 2 நாட்கள் | 344.90 ரூபா |

8. 2011.11.08 ஆந் திகதி தொழில் ஆணையாளர் தலைமை அதிபதியின் முன்னிலையில் கையொப்பமிடப்பட்ட புரிந்துணர்வுத் தீர்ப்பனவின் 12 (1) ஆம் பிரிவின் கீழ் திறத்தவர்களினால் ஏற்கனவே உடன்பட்ட உற்பத்தித் தரங்களுக்கமைய க்ரெஸ்ட் பிரிவில் வேலை செய்கின்ற ஊழியர்கள் தொடர்பில் உற்பத்தி தொடர்பான வருகைக்கான படி பின்வரும் முறையில் கொடுப்பனவு செய்யப்படும்.

ஒரு நாளைக்கான கொடுப்பனவு வீதம் 87.31 ரூபாவாக இருக்கும்.

உற்பத்தி மட்டங்கள் தொடர்பான கொடுப்பனவின் தற்போதைய வீதங்கள் மாறாதிருக்கும்.

9. 9.1 தற்போதைய வேலை நிலைமைகள், இடம், தொழிலாளர்களின் எண்ணிக்கை மற்றும் இருக்கக்கூடிய இயந்திரங்கள் என்பவற்றின் கீழ் 2013.10.31 ஆந் திகதியிடப்பட்ட சுயமாக ஓய்வுபெறும் திட்டத்தை தொடர்ந்து மறுசீரமைக்கப்பட்ட மற்றும் குறைக்கப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கை என்பவற்றையும் கருத்தில் கொண்டு ஒரு முறைமாற்றுப்பணியில 2,000 கி. கி. பதனிடப்பட்ட இறைச்சியும் 2,000 கி. கி. பதனிடப்படாத பச்சை இறைச்சியும் என்ற அடிப்படையில் சராசரி உற்பத்தியை பராமரிப்பதற்கான முயற்சியை இந்த உடன்படிக்கையினால் காப்பீடு செய்யப்பட்ட மற்றும் பிணைப்புடைய சங்கம் மற்றும் ஊழியர்கள் மேற்கொள்வர்.

9.2 2013.11.01 ஆந் திகதியிடப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையானது இந்த உடன்படிக்கைக்கு ஒரு பகுதியாகவும், பாகவுமாகவும் இருக்கும் எனவும் திறந்தவர்களினால் உடன்படப் பட்டது.

10. 10.1 சமயாசமய ஊழியர்கள் தேவையின் அடிப்படையில் பணிக்கமர்த்தப்படுவர் என்பதோடு அவர்களின் சம்பள வீதங்கள் சந்தை வீதங்களுக்கேற்ப தீர்மானிக்கப்படும்.

10.2 அட்டவணை I இல் பட்டியலிடப்பட்ட ஒரு சமயாசமய ஊழியர் 2014.11.01 ஆந் திகதியிலிருந்து அமுலுக்கு வரும் வகையில் நிரந்தரப்பதவியணியில் சேர்த்துக் கொள்ளப்படுவார். அவ்வாறு சேர்த்துக் கொள்ளப் பட்ட ஊழியர் வருகை தராதராதவர் களினது வேலை/ வெற்றிடத்தைக் காப்பீடு செய்வதற்கான தேவையை அடிப்படையாகக் கொண்டு தொழிற்சாலைக்குள் ஏதேனும் பிரிவில் வேலை செய்வதற்கு வேண்டப் படுவார். அத்தகைய ஊழியரின் அடிப்படை சம்பளம் 2014.11.01 ஆந் திகதியிலிருந்து அமுலுக்கு வரும் வகையில் மாதத்துக்கு 11,500 ரூபா வீதம் வழங்கப்படும்.

10.3 அட்டவணையில் II இல் பட்டியலிடப்பட்ட ஊழியர்களின் அடிப்படை சம்பளம் 2014.11.01 ஆந் திகதியிலிருந்து அமுலுக்கு வரும் வகையில் மாதத்துக்கு 12,500 ரூபாவாக திருத்தப்படும். அத்தகைய ஊழியர்கள் வருகை தராதவர்களின் வேலை/ வெற்றிடத்தைக் காப்பீடு செய்வதற்கான தேவையை அடிப்படையாகக் கொண்டு தொழிற்சாலைக்குள் ஏதேனும் பிரிவில் வேலை செய்வதற்கு வேண்டப் படுவார்கள்.

11. 2000.11.14 ஆந் திகதியிடப்பட்ட உடன்படிக்கையின் ஏற்பாடுகளும், வேலை ஆயத்தங்கள், படிகள், பட்டா வீதங்கள் (புரிந்துணர்வு ரீதியாக உடன்பட்ட திருத்தங்களுக்கமைய) தொடர்பில் 2001.11.08 ஆந் திகதியில் கைத்தொழில் பிணக்குகள் சட்டத்தின் 12 (1) ஆம் பிரிவின் கீழ் தொழில் ஆணையாளர் தலைமை அதிபதியின் முன்னிலையில் திறத்தவர்களுக்கிடையில் மேற்கொள்ளப்பட்ட தீர்ப்பனவு உடன்படிக்கையின் ஏற்பாடுகளும், பிணக்குகள் தீர்ப்பனவு நடைமுறையும் இந்த உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டவாறு ஏதேனும் திருத்தத்துக்கு உட்பட்டால் தவிர இந்த உடன்படிக்கை அமுலில் இருக்கின்ற காலத்தில் அவ்வாறே இருக்க வேண்டுமென திறத்தவர்களுக்கிடையில் இத்தால் உடன்பாட்டுக்கு வரப்படுகின்றது.

12. தொழிற்சாலையில் தற்போதைய செயற்பாட்டு அமைப்புக்கு ஒரு முக்கிய மாற்றத்தை மேற்கொள்ளப்படுகின்ற சந்தர்ப்பத்தில், ஊழியர்களின் எண்ணிக்கைக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் சாத்தியம் உள்ளதாகக் காணப்படுகின்றது. அத்தகைய விடயங்கள் சங்கத்துடன் கலந்துரையாடப்பட வேண்டும்.

13. இந்த உடன்படிக்கை அமுலில் இருக்கின்ற காலத்தில் புரிந்துணர்வு உடன்படிக்கையினால் தவிர, ஏதேனும் நியதிகள் மற்றும் நிபந்தனைகளை அல்லது தற்போது ஊழியர்களுக்கு ஏற்புடைய அனுகூலங்களை மாற்றுதல், திருத்துதல் அல்லது சேர்த்தல் போன்ற ஏதேனும் ஒன்றை இரு திறத்தவர்களும் மேற்கொள்ளக்கூடாது.

இதற்கு அத்தாட்சியாக 2014, ஒற்றோபர் 16 ஆந் திகதி இதன் திறத்தவர்கள் இதற்குக் கையொப்பமிட்டார்கள்.

| | |
|---|---|
| ........................................... | ........................................... |
| கீல்ஸ் புட் புரொடக்டஸ் ,<br>பி. எல். சி. நிறுவனத்துக்<br>காகவும் அதன் சார்பிலும், | சிலோன் மேர்கன்டைல்,<br>இன்டஸ்ட்ரியல் அன்ட் ஜெனரல்<br>வேர்கஸ் யூனியன் சங்கத்துக்<br>காகவும் அதன் சார்பிலும் |
| பெயர் : ஜிட் குணரத்ன<br>பதவி : தலைவர்,<br>கன்சியூமர் புட்ஸ் குரூப்,<br>ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ் பிஎல்சி | பெயர் : எஸ். ஜயகொடி<br>பதவி : பொதுச் செயலாளர் |
| ........................................... | ........................................... |
| பெயர் : AADHC அம்பேபிடிய<br>பதவி தலைவர் - நடவடிக்கைகள் | பெயர் யூ. ஜீ. மஹிந்த,<br>பதவி : கிளைத்தலைவர் |

சாட்சிகள் :

1. ....................................
பெயர் : நிலந்த ஜயசிங்க
பதவி : தலைவர்-சர்வதேச உறவுகள்

1. ........................................
லோரன்ஸ் பெரேரா,
பதவி : கிளைச் செயலாளர்.

2. ....................................
பெயர் : தரங்க தில்ஹான்
பதவி : தலைவர் - மனிதவளங்கள்

2. ........................................
பெயர் பி.எஸ். பீ. குமார,
பதவி : கிளை உப தலைவர்.

**அட்டவணை I**

| இல. | சமயாசமய ஊழியரின் பெயர் | தொழிலில் சேர்ந்த திகதி | சமயாசமய ஊழியரின் இலக்கம் |
|---|---|---|---|
| 1. | WPSH பர்னாந்து | 2012.07.12 | T 1452 |

**அட்டவணை II**

| இல. | ஊழியர் இலக்கம் | முதலெழுத் துக்கள் | குடும்பப் பெயர் |
|---|---|---|---|
| 1. | 1441 | A. K. S. | ப்ரியமல் |
| 2. | 1442 | J. M. U. G. S. | குமார |
| 3. | 1443 | M. G. S. S. | புஷ்பகுமார |
| 4. | 1444 | U | பியரத்ன |
| 5. | 1445 | L. U. G. N. | ஜயரத்ன |
| 6. | 1456 | M. L. S. | ரணசிங்க |
| 7. | 1448 | R. A. P. | மஞ்சுல |

7 - 1350

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.